மலர் 2 இதழ் 1 ஜூலை, 2017 ISSN : 2454-3993

# கலித்தொகைப் பாடல்களில் கனவுகள்

அ. தர்மா
முனைவர் பட்ட ஆய்வாளர்
அ.வீ.வா.நி. திருபுட்பம் கல்லூரி (குன்னாட்சி)
பூண்டி

**முன்னுரை**

இலக்கியங்களை காலக்கண்ணாடி என்பார், ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை இயற்கைச் சூழல், சமூக அமைப்பு ஆகியவற்றின் தாக்கத்தால் ஏற்படும் கருத்துகள் இலக்கியப் படைப்புகளில் பதிவாகின்றன. பண்டைத் தமிழரின் புகழ் பெற்ற இலக்கியங்கள் "பாட்டு தொகையும்" ஆகும். தமிழ்மொழியின் கருவூலமாகத் திகழும் இவை கடைச் சங்க நூல்கள் எனப் போற்றப்படுவதாகும். பாட்டு என்பது பத்துப்பாட்டையும் தொகை என்பது எட்டுதொகையும் குறிப்பனவாகும்.

**அக இலக்கியம்**

பண்டைய தமிழ்ச் சான்றோர் ஒழுக்கத்தை அகம், புறம் என இருவகையாக பகுத்துக் கொண்டனர். அகத்தே நிகழும் இன்பம் என்று ஆன்றோர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஒத்த வடிவம், எண்ணம், சொல், வளம், இளமை உடைய தலைவன் தலைவியிடையே நிகழும் இன்பத்தையும் துன்பத்தையும் சங்க இலக்கியங்கள் பிரதிபலிக்கின்றன.

சங்க இலக்கியங்களுள் அக இலக்கியங்கள் பெரிதும் போற்றப்படுகிறது. களவு, கற்பு என்னும் நிலைகளில் தலைமகளைத் தோழி, நற்றாய் செவிலித்தாய் போன்றோர் சிறப்பையும் வாழும் தன்மையும் இவ்விலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அக இலக்கியங்களில் வரைவு நிலை, புணர்ச்சி நிலை, நினைவோட்டம், நனவு நிலை உரைத்தல் போன்றவற்றை படைப்பு உத்தியாக கொண்ட அக இலக்கியம் வாயிலாக உளவியல் கோட்பாடுகளும், கனவுக் கோட்பாடுகளும் இக்கட்டுரையில் ஆய்வுப் பொருண்மையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**கலித்தொகை**

கலித்தொகை கலிப்பாட்டு எனவும் கற்றறிந்தோர் ஏத்தும்கலி எனும் அடைச்சிறப்பு பெற்றது, தரவு, தாழிசை, சுரிதகம் தனிச்சொல் அமைப்புகொண்டு 150 பாடல்கள்

இடம்பெற்றுள்ளன. கலிப்பாட்டு ஒவ்வொன்றையும் வைத்து ஒரு கதையே புனைந்து விடலாம். ஒருதலைக் காதல், பொருத்தாக் காதல் ஏவலர், அடிமைகள் பற்றிய உறவுகள் புராணக்கூறுகள், கனவுகள் பற்றிய பாடல்களும் அக இன்பம் பற்றிய செய்திகளும் கனவு ஒரு விளக்கம். கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன.

கனவுகள் இறைவன் நமக்கு அளித்த மாபெரும் பரிசாகும். நனவுலகில் செய்ய இயலாதவற்றை நாம் கனவு உலகில் சாதிக்க முயலுகிறோம். இனிமையான கனவு நல்லதோர் ஆரம்பம், சிறு குழந்தை முதல் நரை திரை விழுந்த முதியோர் வரை அனைவரையுமே ஆட்டி வைப்பது கனவுகளே.

பிறந்த குழந்தை சில நாட்களிலே உறக்கத்தில் அதுவாகச் சிரிப்பதைத் தாய்மார்கள் கடவுள் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டுகிறார் என்பார்கள். முகம் கோணினால் நரி மிரட்டுகிறது. அழுவது போல செய்யும் இறைவன் தலையில் கொட்டுகிறார் என்பார்கள். அடுத்த சில நிமிடங்களில் இறக்கப்போகும் முதியவர்களும் தங்கள் உறக்க மயக்கத்தில் உள் மனத்திரையில் கனவு படங்களாக விரிவதைக் காண்பது உறுதி, "ஒரு மனிதனின் சராசரியாக வாழ்நாள் அறுபது ஆண்டுகள் என எடுத்துகொண்டால் அதில் சுமார் 12 ஆண்டுகள் கனவு காண்பதில் செலவிடுகின்றனர்" என எல். சீனிவாசன் கனவுகள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

**நெய்தற்கலிப் பாடலில் கனவுகள்**

நெய்தற் நில மக்கள் கனவுகளோடுதான் வாழ்கின்றனர் என்பதனை இப்பாடல் மூலமாக உணர முடிகிறது.

"பின்னவிர் றுடக்கமுங் நில்லாமை நனி வௌவித்
என்நெஞ்சம் கரந்தாளைக் தலைப்பமொ றெவன் கொலோ
மணிப்பீலி சூட்டியநூலொரு மற்றை"

என் நெஞ்சம் என்னோடு கூடி நில்லாமல் தனியே நின்று எவ்வாறு வருத்தம் தருகின்றதோ அதனைப் போன்று தலைவியைப் பிரிந்து இருக்கின்ற தலைவன் தன் உள்ள நிகழ்வுகளைப் பற்றியும் தலைவி மின்னின் நுடக்கமும் கனவின் தோற்றமும் போன்ற தன் வடிவைக் காட்டினாள் என்னுடன் முற்படக் கூடினாள் எனக் கனவு காண்கிறான்.

**தலைவி கண்ட கனவு**

நெய்தற்கலியில் "தோள் துறந்து அருளாதவர்" எனத் தொடங்கும் நல்லத்துவனார் பாடிய 128ஆம் பாடலில் தலைவி கண்ட கனவு இடம் பெற்றுள்ளது.

"கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை யென்றி யாயின்
நனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி"

"கனவினாற் கண்டேன் தோழிகாண் தகக்

கனவின் வந்த கானலந் சேர்ப்பன்

நனவின் வருதது முண்டென

அனைவரை நின்றதென் அரும் பெற ஞாயிரே."

வாடைக்காற்று அசைந்தால் வளைந்த தாழைச் செடியின் அசையும் கொம்பில் இருந்த அசைந்த நடையை உடையது நாரை. நம் துன்பத்தை அறியாமல் நம் மீது அருள் இல்லாது தனக்குக் காம நோயால் வருத்தம் அடையாது இடைவிடாமல் கூப்பிடும் இத்தகைய கானலையுடைய சேர்ப்பனைப் பார்த்துக் கூடியவள் போன்று புதியதாய் அழகை உடையவள். ஆனால் எனச் சொல்கின்றாய் ஆயின் வெளிப்பட வராத உறவல்லாதவனைக் கனவில் கண்டு நான் செய்ததைக் கேட்பாயாக!

உன்னைப் பிரியின் உயிர் வாழேன் என்றவனைத் தலைவி பற்றினாள். என் நலத்தை நீ கொண்டு விட்டாய் அதை எனக்குத் தருக என்று வளைத்தாள் அப்போது அவன் அவளைத் தழுவி 'வருந்தாதே' என்றான். என்னை மறத்தலே (அல்லது) முலையில் உறங்கவும் மறந்தாய்!' என்று சொல்லி அவள் அழுதாள். அதைக் கண்ட தலைவன் வலையில் அகப்பட்ட மயிலைப்போல் வருந்துகின்றாய் என்று சொல்லி அவளுடைய அடிகளில் விழுந்து வணங்கினான். வணங்கிய அவனை, அவள் மலர் மாலையே கோலாகக் கொண்டு அடித்தாள். அவள் 'நான் செய்த தப்பு யாது? என்று கூறித் தெளிவித்தான்.

நெய்தற்கலியில் "புரிவுண்ட புணர்ச்சியுள் புல்லாரா மாத்திரை" என தொடங்கும் 142 ஆம் நல்லந்துவனார் பாடலில் கனவு பற்றி செய்தி:

"உள்ளி வருகுவர் கொல்லோ? வளைந்து யான்

எள்ளி இருக்குவேன் மற்கொலோ? நள்ளிருள்

மாந்தர் கூடி கொண்ட கங்குல், கனவினான்

தோன்றினனாக தொடுத்தேன் மன், யான் தன்னைப்

ஐபயெனக் காண்கு விழிப்ப, யான் பற்றிய"

நான் அவர்க்கு உடம்படாது அவரை இகழ்ந்திருப்பேனா! என்று நினைத்துச் சூழ்ந்த இருளையுடைய ஊர்க் காவலர் காவலையுடைய இரவில் கனவில் வந்து நான் அவனை வளைத்து பிடித்துக் கொண்டேன், ஆனால் பயன் யாது? நான் அவனைப் பிடித்துக் கொண்டதாக எண்ணி மெல்ல விழிக்க, நான் பிடித்த கையுள்ளே மறைந்து தோன்றாமல் போய்விட்டான். இனி ஞாயிற்றைக் கொண்டே (பகலில்) அவனைக் காண்பேன் எனத் தலைவி எண்ணினாள்.

நெய்தற்கலியில் "பொன்மலை சுடர்சேரப் புலம்பி" எனத் தொடங்கும் 126 ஆம் நல்லந்துவனார் பாடலில் கனவு பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

"நீள் நகர் நிறை ஆற்றாள் நினையுநள் வதிந்தக்கால்

தோள் மேலாய் என நின்னை மதிக்கும்மன் மதித்தாங்கே

நனவு எனப் புல்ஞுங்கால் காணாளாய் கண்டது

கனவு என உணர்ந்து பின் கையற்று, கலங்குமே என வாங்கு

பல நினைத்து, இனையும் பைதல் நெஞ்சின்"

எனும் பொருண்மையுடைய பாடலின் கருத்து: உயர்ந்த இல்லத்தில் மனத்தை நிறுத்த மாட்டாதவனாய் உன்னை நினைத்துத் தளர்ச்சியால் சிறிது உறங்கியவிடத்துத் தன் தோள் மீது நீ கிடப்பதாய் எண்ணுவாள். எண்ணிய அப்போதே நின் உடல் என்று எண்ணித் தழுவுமிடத்து, நின் வடிவைக் காணாமல் 'தான் கண்டது கனவு' என்று அறிந்து செயலற்றுக் கலங்குவாள்.

நெய்தற்கலியில் "துணையுநர் விழைக்க" எனத் தொடங்கும் 145 ஆம் பாடலில் கனவு பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

"துனையுநர் விழைக்க சிறப்புப் போற்

நனவினுள் உதாவது கண்டார்க்கு நள்ளிருள் வேறாகுங்

கனவின் நிலையின்றால் காமமொருத்தி

உயிர்க்கும் உசாஅம் உலம் வரும் ஔவாள்"

எனும் பொருண்மையுடைய பாடலின் கருத்து காமமானது நள்ளிருளில் கண்டவார்க்கு நனவில் உதவாமல் வேறுபட்டுப் போகும்; கனவிலும் நிலைப் பெறாததாக உள்ளது. எப்படி என்றால் நீண்ட அடர்த்தியான கூந்தலை உடைய ஒருத்தி அவள் தன் குணங்களையெல்லாம் நுகர்ந்து தன்னைக் கைவிட்டவனை நினைத்துப் பெருமூச்சு விடுவாள்.

"கனவினாற் காணிய கண்படா வாயின்

நனவினான் ஞாயிறே காட்டாய் நீயாயின்

பனையீன்ற மாவூர்ந் தவன் வரக் காமன்

கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு"

முன் சொன்ன ஞாயிற்றையும் காமனையுமே திரும்பவும் நினைத்தாள். வருகின்ற இரவில் களவில் அவனைப் பார்த்து ஆற்றுவதற்குக் காமன் அம்பு செய்கின்ற கொடுமையால் கண்கள் உறங்கவில்லையாயின் கதிரவனே எல்லாப் பொளையும் காட்டுகின்ற நீ நனவில் வந்தேனும் அவனைக் காட்டாயானால் இப்படி வருத்தம் அடைந்த பனை ஈன்ற குதிரை மீது ஏறி அவன் என்னிடம் தானே வரும்படியாக, அந்தக் காமன் காலைக் கட்டிக்கொண்டு உன் அம்புகளை எனக்குத் தருதல் வேண்டும் என்று அவள் சொன்னாள்.

**முடிவுரை**

கனவு என்பது ஏழை, பணக்காரர் என பேதமின்றி அனைவருக்கும் வரக் கூடியது ஆகும். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் கனவுகள் பற்றிய செய்திகள் விரவிக் கிடக்கின்றன. நனவிலும் உணர்ச்சியிலும் கனவு முக்கிய பங்காற்றுகிறது.